**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 166 | of | 2016 |

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் பி.வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | Siddiq @ Abu Baker | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-07.10.2025**

**பி.வா.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**-

வா.சா.ஆ.30 ல் கண்டுள்ள முதலில் மேரி தாமஸ் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த மேரி தாமஸ் மீது ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி நான் ஒரு வழக்கு இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது 2006 ல் எனக்கு ஆதரவாக தீர்ப்பானது. அந்த வழக்கு எண். 764/2004 ஆகும். மேரி தாமஸ் எனக்கு கிரய ம் செய்ய ஒப்பந்தம் போட்டதன் அடிப்படையில் அந்த வழக்கு தாக்கல் செய்தேன். மேரி தாமஸ் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்று சொல்லி எதிர் வழக்காடவில்லை. அந்த ஒப்பந்தத்தை expert opinion க்கு

அனுப்ப மனு தாக்கல் செய்து அதன்பிறகு வாபஸ் வாங்கிவிட்டார். அந்த மேரி தாமஸின் அதிகார முகவர் ராபர்ட் ஞானசேகரன் ஆவார். ஆனால் அதில் விற்க வாங்க அவருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. அ.வ.எண். 764/2004 நிலுவையில் இருந்த போது மேரி தாமஸ் இறந்து விட்டார். அந்த வழக்கு ஒரு தலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் மெரிட் அடிப்படையில்தான் தீர்ப்பாணை வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பாணையை எதிர்த்து மேரி தாமஸின் உயில் படி வாரிசுகள் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அவர்கள் சொத்துக்கு சட்டப்படியான வாரிசுகள் என்றால் இருக்கலாம். மேரி தாமஸின் வாரிசுகள் அதே ராபர்ட் ஞானசேகரனுக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தனர் என்றால் சரிதான். அந்த மேல் முறையீட்டில் தீர்ப்பாணையை ரத்து செய்து மீண்டும் இதே நீதிமன்றத்தில் மறுவிசாரணை நடத்தி 3 மாதத்தில் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான். மேரி தாமஸின் அதிகார முகவர் என்ற முறையில் ராபர்ட் ஞானசேகரன் சொத்தில் ஒரு பகுதியை அந்தோனி மைக்கேல் என்பவருக்கு கிரய பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் அது எனக்கு பின்னிட்டுதான் தெரிய வந்தது. மேரி தாமஸ் இறந்தது 04.11.2006 ஆகும். ராபர்ட் ஞானசேகரனுக்கு அதிகார பத்திரம் எழுதி வைக்கப்பட்ட ஆண்டு 2005 ஆகும். ஆனால் அந்தோனி மைக்கேலுக்கு கிரயம் செய்யும் போது மேரி தாமஸ் உயிருடன் இல்லை. ராபர்ட் ஞானசேகரன் காமராஜ் என்பவருக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. மேரிதாமஸின் வாரிசுகள்

பொது அதிகார முகவர் ராபர்ட் ஞானசேகரன் எழுதிக் கொடுத்த கிரயங்கள் செல்லும்என்று சம்மத பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்றால் அவ்வாறு கொடுக்கப்படவில்லை. இ.ம.எண். 1045/2007 என்ற மனுவில் போலி ஆவணங்களை உருவாக்கியதாக சொல்லி ராபர்ட் ஞானசேகர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் மேரி தாமஸின் வாரிசுகள் மற்றும் ராபர்ட் ஞானசேகர் கிரய ஆவணங்கள் உண்மையானதுதான் என்று சொல்லி பதில் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. அந்தோணி மைக்கேல் பெற்ற கிரயம் செல்லாது என்று நான் சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்று ஞாபகம் இல்லை. அந்தோணி மைக்கேல் எனக்கு எதிராக தாம்பரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.30 எழுதிக் கொடுக்கப்பட்ட காலத்தில் இந்த வழக்குகள் நிலுவையில் இருந்தன என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu